# இலங்கை இறப்பர் ஆராய்ச்சி சபை 2012

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து இலங்கை இறப்பர் ஆராய்ச்சி சபையின் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கமைய நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) இறப்பர் இருப்பு தவிர்ந்த ரூபா 10,932,081 தொகையான ஏனைய பொருட்களின் இருப்பு வருடாந்த பொருள் மெய்மையாய்வின் பெறுமதியில் அல்லாது புத்தகப் பெறுமதியின் அடிப்படையில் கணக்குகளுக்கு எடுக்கப்பட்டிருந்தது. ஆகையால் சேதங்கள் மற்றும் நட்டங்களால் ஏற்படும் இழப்புகள் நிதிக்கூற்றில் வெளிப்படாமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) குரவிட்ட தோட்டத்தில் 2012 ஆம் ஆண்டின் போது இறப்பர் பால் விற்பனைப் பெறுமதி ரூபா 36,622,548 ஆன போதிலும் நிதிக்கூற்றுக்களிற்கு விற்பனையிலிருந்து கிடைக்கப்பெற்ற ரூபா 34,456,466 தொகையான பணம் மாத்திரமே கொண்டுவரப்பட்டிருந்தது. இதன் படி ரூபா 2,166,082 தொகையான விற்பனை குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) டார்டன் பீல்ட் மற்றும் குரவிட்ட தோட்டங்களிற்கு உரித்தான ரூபா 1,280,021 கூட்டுத்தொகையான சொத்துக்களின் பெறுமானத்தேய்வு வாகன விற்பனையின் மூலம் கிடைக்கப்பெற்ற ரூபா 778,178 தொகை காசுப்பாய்ச்சல் கூற்றில் சீராக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.2.2 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் இறுதியில் நிலவிய ரூபா 28,196,205 தொகையான கடன்பட்டோர் மீதிகளில் 5 ஆண்டுகளுக்கும் மேலான காலமாக நிலவிவரும் 405 கடன்பட்டோருக்கு உரிய ரூபா 16,326,874 தொகையான கடன்பட்டோர் மீதியை அறவிடுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இலங்கை இறப்பர் ஆராய்ச்சி சபையால் ஓர் கட்டிட நிர்மாணிப்பிற்காக 1985 ஆம் ஆண்டின் போது ஆலோசனைச் சேவைககள் திணைக்களத்திற்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 5,214,500 தொகையான முற்பணத்தை அறவிடுவதற்கோ அல்லது பதிவழிப்பதற்கோ நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) இறப்பர் அபிவிருத்தி திணைக்களத்திற்கு ஈடுபடுத்தப்பட்டிருந்த இலங்கை இறப்பர் ஆராய்ச்சி சபையின் நம்பிக்கை நிதியத்தில் அங்கத்துவம் வகிக்கும் ஊழியர்களுக்காக அறவிடப்பட வேண்டிய ரூபா 1,798,731 தொகை இறப்பர் அபிவிருத்தி திணைக்களத்திடமிருந்து அறவிடப்படுவதற்கு 2013 யூலை 15 ஆம் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) பட்டதாரிகளைப் பயிற்றுவிப்பதற்காக பெருந்தோட்டத்துறை அமைச்சிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 627,984 தொகை தொடர்ந்து நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்ததுடன் தீர்க்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) அறவிடப்படுவதற்காக சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படாது 15 ஆண்டுகளுக்கும் மேல் பழமைவாய்ந்த ரூபா 4,746,939 பெறுமதியான பிணை கடன்பட்டோர் மீதியை அறவிடுவதற்கோ அல்லது பதிவழிப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) தவணைக் கொடுப்பனவுகளைச் செலுத்தத் தவறியிருந்த பிணை கடன்பட்டோர் மூவரிடமிருந்து பெறவேண்டிய ரூபா 2,989,277 தொகையை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(எ) நிதிக்கூற்றுக்களில் 3(ii)(சீ) குறிப்பில் குறிப்பிடப்பட்டிருந்த ரூபா 11,112,317 பெறுமதியான கடன்பட்டோர் மீதியில் ரூபா 2,228,588 ஆன 21 கடன்பட்டோர் மீதி 06 ஆண்டுகளுக்கும் மேலான காலமாக நிலவிவரும் மீதிகள் அறவிடப்படுவதற்கான உறுதிப்படுத்தல்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஏ) குறிப்பு இல. 08 – ஏ-i இன் கீழ் செலுத்தப்பட வேண்டிய முற்பணமான ரூபா 9,258,909 இல் அடங்கியிருந்த ரூபா 1,976,077 பெறுமதியான 19 மீதிகளும் டார்டன் தோட்டத்தின் ரூபா 9,760,698 தொகையான கடன்கொடுத்தோர் மீதியில் உள்ளடங்கப்பட்ட ரூபா 341,373 பெறுமதியான 2 மீதிகளைத் தீர்ப்பதற்கோ அல்லது புத்தகங்களிலிருந்து அகற்றப்படுவதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஐ) ஐந்தொகை குறிப்பு இல. 3.i இன் கீழ் காண்பிக்கப்பட்டுள்ள ரூபா 443,447 பெறுமதியான அறவிடப்பட வேண்டிய மீதியில் 6 நிறுவகங்களிலிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 101,306 பெறுமதியான வைப்பு மீதிகள் 7 ஆண்டுகளைப் பார்க்கிலும் மேலான மீதியானதுடன் அவை அறவிடப்படுவதற்கு எவ்வித உறுதிப்பாடும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.2.3 கணக்காய்விற்கான சான்றுகள் இல்லாமை

பின்வரும் கணக்கு விடயங்களுக்கு எதிராகக் காட்டப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| | கணக்கு விடயம் | பெறுமதி | சமர்ப்பிக்கப்படாத சான்று |
|---|---|---|---|
| | | ரூபா | |
| (அ) | நிலையான சொத்துக்கள் | 398,626,685 | நிலையான சொத்துப் பதிவேடு |
| (ஆ) | சாதாரண கடன்பட்டோர் | 19,990,736 | கடன்பட்டோர் மீதிகளின் உறுதிப்படுத்தல்கள் |
| (இ) | டார்டன் பீல்ட் தோட்டத்திலிருந்து பெறவேண்டிய மீதி | 8,502,490 | கடன்பட்டோர் மீதிகளின் உறுதிப்படுத்தல்கள் |
| (ஈ) | பெற்றுக்கொள்ளப்பட்ட முற்பணங்கள் | 9,258,909 | கடன்கொடுத்தோர் காலப்பகுப்பாய்வு |

### 1.2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மை

சபையின் ஓர் வாகனம் பெருந்தோட்ட துறை அமைச்சுப் பதவியணியின் கடமைகளுக்காக விடுவிக்கப்பட்டிருந்ததுடன் ஒரு மாதமும் 4 நாட்களுக்குள் 4091 கி.மீ. ஓட்டத்தில் ஈடுபடுத்தப்பட்டிருந்த போதிலும் நிதிப் பிரமாணம் 1645 இன் பிரகாரம் நாளாந்த ஓட்ட அட்டவணையும் மாதாந்த பொழிப்பு அறிக்கையும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான சபையின் செயற்பாட்டு விளைவுகள் திறைசேரியிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 185,705,000 தொகையான மானியத்தைக் கணக்கிற்கு எடுத்துக்கொண்டதன் பின்னர் ரூபா 68,557,639 பற்றாக்குறையாக இருந்ததுடன் இதனோடொத்த முன்னைய ஆண்டிற்காக திறைசேரியிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 183,100,000 தொகையான மானியத்தைக் கணக்கிற்கு எடுத்துக்கொண்டதன் பின்னர் ரூபா 18,547,965 மிகையாக இருந்தது. கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டிற்கான நிதிவிளைவு ரூபா 87,105,604 வீழ்ச்சியைச் சுட்டிக்காட்டியிருந்ததுடன் இது நூற்றுவீதமாக 475 சதவீதமாகக் காணப்பட்டது. இதற்காக கடந்த ஆண்டிற்கு ஒப்பாக சபையின் நிலைய மற்றும் நிர்வாகச் செலவினங்கள் 20 சதவீதத்தால் அதிகரித்தமையும், டார்டன் பீல்ட் மற்றும் குரவிட்ட தோட்டங்களின் இலாபம் கடந்த ஆண்டிற்கு ஒப்பாக முறையே 36 சதவீதத்தாலும் 44 சதவீதத்தாலும் குறைவடைந்தமையும் குமாரவத்த தோட்டத்தின் நட்டம் கடந்த ஆண்டிற்கு ஒப்பாக 42 சதவீதத்தால் அதிகரித்தமையும் தாக்கமளித்திருந்தது.

### 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் போது திறைசேரியிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட மானியத்துடன் ஒப்பிடுகையில் சபையின் மொத்த வருமானம் ரூபா 197,880,882 ஆக இருந்ததுடன் அதனை முன்னைய ஆண்டிற்கான ரூபா 196,888,110 தொகையான மொத்த வருமானத்துடன் ஒப்பிடுகையில் 0.5 சதவீத அதிகரிப்பு காணப்பட்டது.

(ஆ) மீளாய்வாண்டின் போது இறப்பர் ஆராய்ச்சிக் சபையின் மொத்தச் செலவினம் ரூபா 312,621,408 ஆகக் காணப்பட்டதுடன் இது முன்னைய ஆண்டின் மொத்தச் செலவினத்தொகையான 259,821,971 உடன் ஒப்பிடப்படுகையில் 20 சதவீத அதிகரிப்பைக் காண்பித்தது.

(இ) டார்டன்ட் பீல்ட், குருவிட்ட, குமாரவத்தை, நாரம்பொல ஆகிய நான்கு தோட்டங்களில் உழைத்த இலாபம் மீளாய்வாண்டின் போது ரூபா 46,182,886 ஆக இருந்ததுடன் முன்னைய ஆண்டில் அது ரூபா 81,481,826 ஆக இருந்ததனால் மீளாய்வாண்டிற்கான இலாபத்தின் குறைவு 43 சதவீதமாகக் காணப்பட்டது. ஒரு கிலோ இறப்பருக்காகக் கிடைத்த மொத்த விற்பனை சராசரி விலை முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக 17 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தமையும் 2012 ஆம் ஆண்டின் போது நிலவிய சீரற்ற காலநிலை மற்றும் ஊழியர்களின் தரப்பில் நிலவிய சுகாதாரச் சிக்கல்களும் இவ் இலாபம் குறைவடைவதற்கு முக்கியமாகத் தாக்கமளித்திருந்தன.

## 2.3 நிறுவகத்திற்கு எதிராக அல்லது நிறுவகத்தால் ஆரம்பிக்கப்பட்டுள்ள சட்ட நடவடிக்கைகள்

(அ) மூன்று நபர்களால் சேவையை நிறுத்தல் தொடர்பாக நட்டஈடு கோரி நிறுவகத்திற்கு எதிராக நீதிமன்றங்களில் 05 வழக்குகள் தொடரப்பட்டிருந்ததுடன் செலுத்தப்பட வேண்டிய வட்டி தொடர்பான உடன்பாட்டிற்கு வந்திருக்கவில்லை.

(ஆ) நிறுவகத்தால் நிறுவகத்திடமிருந்த லொறியின் உடல் அமைப்பதற்குக் கொண்டு செல்லப்பட்டு மீளப் பெற்றுக்கொள்ளப்பட்டிராமையால் உரிய நபருக்கு எதிராக ரூபா 730,000 தொகையான நட்டஈடு கோரி மத்துகம மாவட்ட நிதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டிருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

#### (அ) இறப்பர் பால் உற்பத்தியின் செயலாற்றல்

குருவிட்ட தோட்டம் மற்றும் டார்டன்ட்பீல்ட் தோட்டத்தின் இறப்பர் பால் உற்பத்தி தொடர்பான தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| | 2012 ஆம் ஆண்டு | | | | 2011 ஆம் ஆண்டு | | | | வேறுபாடு | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| பால் வெட்டப்படுகின்ற தோட்டங்கள் | இறப்பர் பயிர்ச் செய்கைக் காணியின் இடப்பரப்பு | ஒரு ஹெக்டயருக் கான உற்பத்தி | ஆண்டிற் கான மொத்த உற்பத்தி அளவு | உற்பத்தியின் பெறுமதி | இறப்பர் பயிர்ச் செய்கைக் காணியின் இடப்பரப்பு | ஒரு ஹெக்டயருக் கான உற்பத்தி | ஆண்டிற்கான மொத்த உற்பத்தி அளவு | உற்பத்தியின் பெறுமதி | அளவு (குறைவு/அதிகரிப்பு) | பெறுமதி (குறைவு/ அதிகரிப்பு) |
| | ஹெக்டயர் | கி.கிராம் | கி.கிராம் | ரூபா | ஹெக்டயர் | கி.கிராம் | கி.கிராம் | ரூபா | கி.கிராம் | ரூபா |
| டார்டன்ட்பீல்ட் | 174.85 | 1096 | 191590 | 73,448,195 | 181.61 | 1016 | 184596 | 94,080,018 | 6994 | (20,631,823) |
| குருவிட்ட தோட்டம் | 71.29 | 1403.32 | 100,043 | 36,622,548 | 68.79 | 1495 | 102825 | 45,534,926 | (2782) | (8,912,378) |

மேற்குறித்த தகவல்கள் தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(i) குருவிட தோட்டத்துடன் ஒப்பிடுகையில் டார்டன்ட்பீல்ட் தோட்டத்தில் ஒரு ஏக்கருக்கான இறப்பர் பால் உற்பத்தி 2011 ஆம் ஆண்டில் 479 கிலோ கிராமினாலும் 2012 ஆம் ஆண்டில் 307 கிலோ கிராமினாலும் வீழ்ச்சியுற்றிருந்தது. குருவிட்ட தோட்டத்தின் பயிர்கள் ஆராய்ச்சி பயிர்களாக இருத்தல். மழைக் காப்பினைப் பயன்படுத்தல், காலநிலைத் தன்மைகள், நில அமைவிடம், குருவிட்ட காணியின் பரப்பளவு குறைவாக உள்ளதனால் பராமரிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் இலகுவாக இருத்தல், பயிர்களின் வயது ஆகிய காரணங்களினால் குருவிட்ட தோட்டத்தில் ஒரு ஹெக்டயருக்கான இறப்பர் பால் உற்பத்தியை டார்டன்ட்பீல்ட் தோட்டத்துடன் ஒப்பிடுகையில் அதிகரித்தமைக்கு பிரதான காரணமாக இருந்தது.

(ii) டார்ட்னட்பீல்ட் தோட்டத்தில் 2011 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டிற்கான இறப்பர் பால் உற்பத்தி ஒரு ஹெக்டேயருக்கு 80 கிலோ கிராமினால் அதிகரித்திருந்தது.

(iii) குருவிட்ட தோட்டத்தில் 2011 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டிற்கான இறப்பர் பால் உற்பத்தி ஒரு ஹெக்டயருக்கு 92 கிலோ கிராமினால் வீழ்ச்சியுற்றிருந்தது. ஊழியர் தரப்பில் ஏற்பட்ட சுகாதாரப் பிரச்சனைகள் மற்றும் சீரற்ற காலநிலைகள் இதற்குக் காரணமாகியிருந்தமை சபையின் கருத்தாகும்.

(ஆ) திணைக்களத்தால் செயற்படுத்தப்படும் இற்றைக்கு 10 ஆண்டுகளுக்கு முன்னர் சபையினால் ஆரம்பிக்கப்பட்ட 84 செயற்திட்டங்களில் 12 செயற்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டமை தொடர்பான முன்னேற்றம் 25 சதவீதத்தைப் பார்க்கிலும் குறைவான மட்டத்தில் நிலவியது.

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மை

(அ) இறப்பர் ஆராய்ச்சி சபையின் நிர்வாக உத்தியோகத்தர் பதவிக்கு ஆட்சேர்க்கப்பட்ட உத்தியோகத்தர்களால் சமர்ப்பிக்கப்பட்ட சேவைச் சான்றிதழின் பிரகாரம் 2005 – 2009 காலஎல்லையில் தனியார் கம்பனிக்கு உரித்தான பதவியில் 3 ½ ஆண்டு கால சேவைக்காலத்தை குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் அந் நிறுவகத்தை 06 மாதகால பயிற்சியை மாத்திரம் பெற்றிருந்ததுடன் உரிய காலப்பகுதியில் வேறு தனியார் கம்பனிகள் இரண்டிற்கு கடமையாற்றியதாக ஊழியர் சேமலாப நிதிய அறிக்கையின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டமையால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள சேவைச் சான்றிதழ்கள் போலியானதென உறுதிப்படுத்தப்பட்டது.

(ஆ) அகலவத்த இறப்பர் ஆராய்ச்சி நிறுவகத்தின் டார்டன் பீல்ட் அலுவலகத்தின் கேட்போர் கூட நிர்மாணிப்பிற்காக 2011 செப்தெம்பர் 28 ஆம் திகதி ஒப்பந்த நிறுவகத்துடன் ரூபா 288,838,759 தொகையான உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டிருந்தது. ஊடன்படிக்கையின் படி இக் கேட்போர்கூடம் 270 நாட்களுக்குள் பூர்த்திசெய்யப்பட வேண்டிய போதிலும் 2013 ஆகஸ்ட் மாதம் வரையிலும் இவ் ஒப்பந்தம் பூர்த்திசெய்யப்பட்டிராததுடன் தாமதக் கட்டணத்தை அறவிடுவதற்கு உடன்படிக்கை நிபந்தனைகள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. இவ்வாறே நிலத்தின் யோக்கியதை குறித்து பரிசோதனை செய்யாது நிர்மாண நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டமையால் கட்டிடத்தின் பாதுகாப்பிற்காக பக்கச் சுவர் நிர்மாணிக்கப்படுவதற்காக ரூபா 2,007,487 தொகையான மேலதிகப் பணம் செலவிடப்பட்டிருந்தது. கட்டிடத்தின் நிர்மாணிப்பு நடவடிக்கைகள் ஒவ்வொரு பொறுப்புவாய்ந்த உத்தியோகத்தரினதும் தொடர்ச்சியான மேற்பார்வைக்கு உட்பட்டிராததுடன் அக் காரணத்தால் சுவர் வெடிப்பு, சீலிங் பூர்த்திசெய்யப்படாமை மற்றும் கீழ் மாடியில் சுவர் ஈரலிப்பாக இருத்தல் ஆகிய குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

## 3.3 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல்வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) உடன்படிக்கை ஏற்படுத்தப்படாது 06 மாதங்களாக தனியார் இறப்பர் கம்பனிக்கு ரூபா 17,341,672 பெறுமதியான இறப்பர் பால் விற்பனை செய்யப்பட்டிருந்தது.

(ஆ) எவ்வித விலை கோரலும் இன்றி ரூபா 564,480 செலுத்தப்பட்டு தனியார் கம்பனியால் மழைக் காப்பு பிசின் கி.கி. 3360 கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் இம் மழைக் காப்பு பிசின் வேறு தனியார் கம்பனியிடமிருந்து பெறப்படின் ரூபா 352,800 இற்குக் கொள்வனவு செய்திருக்கலாம் என கணக்காய்வின் போது அவதானிப்பட்டதுடன் இதில் ரூபா 211,680 தொகை சேமிக்கப்படக் கூடியதாக இருந்தது.

(இ) ஊழியர்களுக்குச் சம்பளம் வழங்கப்படுகையில் அவர்களது அடையாளத்தை உறுதிப்படுத்தாது சம்பளம் செலுத்தப்பட்டிருந்ததுடன் சில ஊழியர்களின் சம்பளம் அவர்களது எழுத்து மூல அங்கீகாரம் இன்றி வேறு தரப்பினர்களுக்குச் செலுத்தப்பட்டிருந்தது. சில ஊழியர்கள் தமது செயற்பாட்டை முறையாக மேற்கொள்ளப்படுவது கண்காணிப்பு உத்தியோகத்தர்களிடமிருந்தும் உறுதிப்படுத்தப்படாது சம்பளம் செலுத்தப்பட்டிருந்தது. இவ்விடயங்களால் போலிப் பெயர்கள் உள்ளடக்கப்பட்டு மோசடி நிகழ்வதற்கான வாய்ப்புகள் அதிகமென்பது கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(ஈ) மேலதிகப் பணிப்பாளர் பதவிக்கு ஆட்சேர்க்கப்பட்டுள்ள உத்தியோகத்தர் செயற்படுத்தும், இறப்பர் பனானா இன்டர் கிறாப்ஸ் நிகழ்ச்சித்திட்டம்'' 1998 ஆம் ஆண்டு முதல் செயற்பட்டு 2001 ஆம் ஆண்டின் போது நிறைவேற்றப்படுவதற்கிருந்த போதிலும் இந் நிதியத்தில் மாதாந்தம் ரூபா 14,000 படி 2002 ஆம் ஆண்டின் போதும் ரூபா 168,000 தொகை சம்பளத்துடன் சேர்க்கப்பட்டு பெறப்பட்டிருந்தது. இச் செயற்திட்டம் 2003 ஆம் ஆண்டின் போது நிறைவேற்றப்பட்டதாக நிறுவனத்தால் அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் அதனை உறுதிப்படுத்துவதற்காக

செயற்திட்டப் பூர்த்தி அறிக்கை பரிசீலிக்கப்படுவதற்கு உரிய கோவை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) இலங்கை இறப்பர் ஆராய்ச்சி சபையின் தலைவருக்கு வழங்கப்பட்டிருந்த சாரதி நாளாந்த சம்பள அடிப்படையில் ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன் அவர் லீவு பெற்றிருக்கையில் அந்நாட்களுக்காக சம்பளம் மற்றும் மேலதிக நேரக் கொடுப்பனவாக ரூபா 29,949 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

## 4. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 கூட்டிணைந்த திட்டமும் செயல்நடவடிக்கைத் திட்டமும்

2013 - 2017 காலப்பகுதிக்காக கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்பட்டிருந்தது. மிகுதி ஆண்டுகளுக்குரிய எதிர்வுகூறலுடன் ஒப்பிடக்கூடிய வகையில் கடந்த ஆண்டுகளுக்கான நிதித்தகவல்கள் கூட்டிணைந்த திட்டத்தில் உள்ளடக்கப்படாதிருந்ததுடன் 05 ஆண்டு காலத்தில் அடைந்து கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட பௌதீக இலக்குகளுக்குரிய நிதிபெறுமதி வெவ்வேறாகச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டின் போது 05 செலவு விடயங்களுக்காக மதிப்பீட்டுச் செலவினம் 5 சதவீதத்திலிருந்து 75 சதவீத வீச்சிலான அளவில் மிகைத்து பயன்படுத்தப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் போது மூலதனச் செலவினத்திற்காக ரூபா 57.4 மில்லியன் மதிப்பிடப்பட்டிருந்த போதிலும் உள்ளபடியான செலவுகள் ரூபா 27.31 மில்லியனாகியிருந்தது. இதன் பிரகாரம், மூலதனச் செலவினம் மதிப்பீட்டுச் செலவினத்தில் 52 சதவீதம் பயன்படுத்தப்படுவதற்கு முடியாதிருந்தது. இதன் பிரகாரம், சபையால் மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த பாதீடு ஆக்கபூர்வமான கட்டுப்பாட்டுச் சாதனமாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் அவ்வப்போது தலைவரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட அவதானம் தேவைப்படுகின்றது.

(அ) பாதீட்டுக் கட்டுப்பாடு
(ஆ) நிலையான சொத்துக்கள் கட்டுப்பாடு
(இ) இருப்புக் கட்டுப்பாடு
(ஈ) கணக்கீடு
(உ) ஆராய்ச்சி நடவடிக்கைகளின் நிர்வாகம்
(ஊ) கொள்வனவுகள்